# DOWNFALL OF SMALL COTTAGE INDUSTRY METHODS: A SOCIOLOGICAL STUDY BASED ON THE SINHALESE WOMEN IN RATTOTA AND EHELAGASTENNA AREA

**N. Lumna[174] & S.H. Hasna Banu[175]**

Correspondence: fathimahasna677@gmail.com

## ABSTRACT

Today Man's creations are being towards sustainability. However, they too are now in danger of extinction. In this age of modern technology, every human being is progressing in their lives. In this way, the economy determines one's diet, health, and occupational health. In the early stages in order to relieve the livelihood, man has engaged in small cottage industries. The small cottage industry is a home-based business, often based on raw materials from the environment and can be a startup with a small amount of capital. In the early days, it was considered as the main livelihood of the people. Some people have done it as a hereditary profession while some people were doing these industries based on caste. Accordingly some people were seen as low-caste people with the professions they engaged. It is worthy of mentioning that small cottage industries are generating high returns from low investments. Though the government is proposing several new projects for rural industry development, still not showing any significant improvements. The problem of the study is why the cottage industry is thriving in the study area and it seeks to identify the reasons for their disappearance of the small cottage industries found among the Sinhalese women of Rattota and Ehelagastennaarea. Qualitative data were derived from primary and secondary sources. Primary data collected through interviews and group discussions and secondary data were collected from the internet, books and magazine. Pottery making, weaving and coconut industry were found among Sinhalese women in the early days of the study area. The study found the development of civilisation, new industry arrivals, low income, innovations, and lack of interest among younger generations have questioned the existence of small cottage industries.

**Keywords**: small cottage industries, Sinhalese women, pottery making, weaving and coconut industry

**ஆய்வுச் சுருக்கம்**

*மனிதன் அழிந்து போகக் கூடியவன். ஆனால் அவனால் படைக்கப்படும் படைப்புக்கள் காலந்தோறும் நிலைத்து நிற்கக்கூடியது. இருப்பினும் தற்போது அவையும் அழிந்து போகும் நிலையே காணப்படுகின்றன. நவீன தொழிநுட்ப யுகமாகிய இக்காலத்தில் ஒவ்வொரு மனிதனும் தத்தமது வாழ்க்கையில் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றான். இதனடிப்படையில் மனிதனின் பொருளாதாரமே அவனின் உணவு, சுகாதாரம் மற்றும் தொழில் வாய்ப்புடன் கூடிய ஆரோக்கியத்தை தீர்மானிக்கிறது. ஆரம்பக் காலங்களில் மனிதன் தன் வாழ்வாதாரத்தை நிவர்த்தி செய்வதற்காக சிறு குடிசைக் கைத்தொழில்களை மேற்கொண்டு வந்தான். பெரும்பாலும் சூழலில் பெறப்படுகின்ற மூலப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு வீட்டிலிருந்தவாறே சிறியளவு மூலதனத்துடன் மேற்கொள்ளப்படுகின்ற கைத்தொழில்களே சிறுகுடிசைக் கைத்தொழில் எனப்படுகின்றது. ஆரம்பக் காலங்களில் மக்களின் பிரதான ஜீவனோபாயமாக இவை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கன. சிலர் இதனை பரம்பரை தொழிலாக செய்து வந்தனர். சிலர் சாதியை அடிப்படையாகக் கொண்டு இவ்*

[174] Department of Sociology, South Eastern University of Sri Lanka.
[175] Department of Sociology, South Eastern University of Sri Lanka.

*தொழிலை மேற்கொண்டு வந்தனர். குறிப்பாக மட்பாண்டம் செய்பவர்கள் குறவர் சாதியை சேர்ந்தவர்களாகக் காணப்பட்டனர். குறைந்த முதலீட்டில் கூடிய வருமானத்தை ஈட்டி தருவதாக சிறு குடிசைக் கைத்தொழில்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கன. கிராமிய குடிசைக் கைத்தொழில் விருத்திக்கு அரசு பல திட்டங்களை முன்வைத்து வருவதாக கூறுகின்றப் போதிலும் கைத்தொழில் விருத்தியடைந்ததாக தெரியவில்லை. ஆய்வுப் பிரதேசத்தில் சிறுகுடிசைக் கைத்தொழில்கள் ஏன் மருவி வருகின்றது என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாக காணப்படுகின்றது. இவ்வாய்வானது இறத்தோட்டை மற்றும் எஹலகஸ்தன பிரதேச சிங்கள பெண்களுக்கு மத்தியில் காணப்பட்ட சிறுகுடிசைக் கைத்தொழில்களை அடையாளங் காண்பதோடு அவை மருவி சென்றமைக்கான காரணங்களை கண்டறிவதனையும் நோக்கமாகக் கொண்டமைந்துள்ளது. ஆய்வுக்கான தரவுகள் பண்புரீதியான முறையில் (Qualitative Method) மூலம் பெறப்பட்டுள்ளதோடு முதலாம் நிலை, இரண்டாம் நிலை மூலகங்களிலிருந்தும் பெறப்பட்டுள்ளன. முதலாம் நிலை தரவில் நேர்காணல், இலக்குக் குழு கலந்துரையாடல் என்பனவும், இரண்டாம் நிலைத் தரவில் இணையத்தள தகவல்கள், நூல்கள் மற்றும் சஞ்சிகைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வுப் பிரதேசத்தில் ஆரம்பக் காலங்களில் சிங்களப் பெண்களுக்கு மத்தியில் மட்பாண்டத் தயாரிப்பு, பாய் இழைத்தல், தென்னை ஓலை கைத்தொழில் போன்ற சிறு குடிசைக் கைத்தொழில்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கன. நாகரீக வளர்ச்சி, புதிய தொழிற்துறைகளின் வருகை, போதிய வருமானமின்மை, புதிய கண்டுபிடிப்புக்கள், இளம் தலைமுறையினரின் ஆர்வமின்மை போன்றன சிறுகுடிசை கைத்தொழில்களின் இருப்பை கேள்விக் குறியாக்கியுள்ளமை இவ் ஆய்வின் மூலம் அறிய முடிகின்றன.*

**பிரதான சொற்கள்** : சிறுகுடிசைக் கைத்தொழில், சிங்களப் பெண்கள், மட்பாண்டத் தயாரிப்பு, பாய் இழைத்தல், தென்னை ஓலை கைத்தொழில்

## ஆய்வின் அறிமுகம்

இலங்கையில் குடிசைக் கைத்தொழில், சிறியளவு கைத்தொழில் என்பவற்றிற்கான தெளிவான வரைவிலக்கணம் இல்லை. அரச நிறுவனங்கள் வெவ்வேறான வகைப்பாடுகளை பயன்படுத்துகின்றன. தொழிலாளர்களின் எண்ணிக்கை, நிரந்தர முதலீட்டின் அளவு, தொழிலின் அளவு, தொழிலின் இயல்பு, தொழில் எத்துறை சார்ந்தது என்பன வகைப்பாட்டினை நிர்ணயிக்கும் காரணிகளாக பயன்படுகின்றன (மூக்கையா,2005).

கைத்தொழில் அபிவிவிருத்திச் சபை (1994) ஒரு கைத்தொழிலானது அது பயன்படுத்தும் இயந்திர சாதனங்கள், தளம் என்பவற்றிற்கு ரூபா 4 மில்லியனுக்கு மேற்படாத முதலீடும் 50 தொழில்ளாளருக்கு மேற்படாததுமாக இருக்குமேயானால் அதனை சிறு கைத்தொழில் என வகைப்படுத்தியிருந்தது. 1983 ஆம் ஆண்டின் கைத்தொழில்கள் பற்றிய கணக்கெடுப்பின் போது இலங்கையில் 102,721 பதிவு செய்யப்பட்டதும், பதிவு செய்யப்படாததுமான கைத்தொழில்கள் 639,256 தொழிலாளர்களை கொண்டு இயங்கியதாக தெரிகிறது. இவ்வாறான தொழில்களில் 84 வீதமானவை , மொத்த கைத்தொழில் சார்ந்த தொழிலாளர்களில் 28 வீதத்தினைக் கொண்ட ஒவ்வொன்றும் 5 தொழிலாளருக்கு மேற்படாத வகையில் செயற்பட்டன. அத்துடன் அவற்றின் மொத்த உற்பத்தி பெறுமதி மொத்த கைத்தொழில் துறை உற்பத்தியின் பெறுமதியின் 7.5 வீதமாகவே காணப்பட்டது. 5 தொழிலாளருக்கு மேலான தொழிலாளர்களைக் கொண்ட கைத்தொழில்கள் 15.7 வீதமாகவும் அவையே 92.5 வீத உற்பத்தியினை வெளியிடுவனவாகவும் மொத்த கைத்தொழில் துறை தொழிலாளர்களின் 71.6 வீதத்தினரை தொழிலுக்கு அமர்த்தியனவாகவும் காணப்பட்டன. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குடிசைக் கைத்தொழில்களின் பங்கு மிகச் சிறியதாகும் (மூக்கையா,2005).

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் நாட்டில் மிகக் குறைந்த கைத்தொழிலாக்கம் உடைய மாகாணங்களில், வட மத்திய மற்றும் ஊவா மாகாணங்களுக்கு ஒத்ததாக ஒன்றாகின்றது. கிழக்கில் அம்பாறை மற்றும் மட்டகளப்பு மாவட்டத்தில் மிகக் கூடுதலான கைத்தைாழில்கள் காணப்பட்டுள்ளன. ஆடைக் கைத்தைாழில்,

மரப்பொருள், இறப்பர் மற்றும் பிளாஸ்ரிக் கைத்தொழில், புகையிலை கைத்தொழில் போன்றவை காணப்பட்டன (சர்வானந்தன்,2008).

அந்த வகையில் இலங்கையில் காணப்பட்ட சிறு குடிசைக் கைத்தொழில்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும். மட்பாண்டத் தயாரிப்பு, பாய் இழைத்தல், முகமூடி தயாரிப்பு, Batic உடை தயாரிப்பு, தென்னை, பனை ஓலைகளால் கைவினைப் பொருட்கள் செய்தல், சிலைகளை செதுக்குதல், தும்புத் தொழில் போன்ற சிறு குடிசைக் கைத்தொழில்கள் ஆரம்பக் காலங்களில் காணப்பட்டன. இவற்றில் குறிப்பாக முகமூடி தயாரிப்பு, Batic உடை தயாரிப்பு, சிலைகளை செதுக்குதல் போன்றவை இன்னும் சில இடங்களில் காணப்படுகின்றன (http://www.srilankabusiness.com).

சிறு குடிசை கைத்தொழிலுக்கான மூலப்பொருட்களை சூழலில் இருந்தே பெற்றுக் கொண்டனர். குறிப்பாக மட்பாண்டத் தயாரிப்புக்காக களி மண், விறகு, பாய் இழைத்தல் கைத்தொழிலுக்காக ஓலை, தும்பு கைத்தொழிலுக்காக தென்னந் தும்பு மற்றும் அகப்பை, சுளகு, தும்புத்தடி, விளக்குமாறு போன்றவை தென்னையின் பாகங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டன. ஆய்வு பிரதேசத்தை பொறுத்தமட்டில் சிறு குடிசை கைத்தொழிலுக்கான மூலப்பொருட்கள் ஆய்வு பிரதேசத்தில் இருந்தே பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கன.

மண்பாண்ட கைத்தைாழிலை பொறுத்தமட்டில் ஆரம்பக் காலங்களில் குயவர் சாதியின் குலத் தொழிலாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அவர்கள் பாணை, ஒற்றைக்கல் அடுப்பு, கும்பாணை, கொள்ளிச்சட்டி, கூசா, பூச்சாடி, பூவாஸ், கண்பாணை, குத்துவிளக்கு, கறிமூடி, மூக்குச்சட்டி, கார்த்திகை தீபம், விளையாட்டு பொருட்கள், எள்ளெண்ணெச்சட்டி போன்றவற்றை செய்பவர்களாகக் காணப்பட்டனர் (www.nanilam.com).

அத்தோடு மட்பாண்டங்களில் சமைத்து உண்பது உடல் ஆரோக்கியத்திற்கு சிறப்பானது என மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர். ஆரம்பக் காலங்களில் மக்கள் மண் பாத்திரங்களிலே உணவு சமைத்தமை குறிப்பிடத்தக்கன. ஆனால் தற்போது எமது சமூகம் வெள்ளி, ஈயம் போன்றவற்றினால் உருவான சமையல் பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களின் பாவனைக்கு எப்பவோ மாறிவிட்டது (https://yarl.com).

ஆரம்பத்தில் பெரும்பான்மை சமூகங்கள் வாழ்ந்த இடங்களில் மாத்திரம் தான் மட்பாண்ட கைப்பணி நிலையம் இயங்கி வந்தது. ஆனால் இவ் கைத்தொழிலை மேம்படுத்தும் வகையில் யாழ்ப்பாணம் மட்பாண்ட கலைஞர் கூட்டுறவு சங்கம், அத்தோடு அண்மையில் மட்டகளப்பு மாவட்டத்தின் கல்குடாப் பிரதேசத்தில் பேத்தாழைக் கிராமத்தில் மட்பாண்ட கைப்பணி நிலையம் கிராமிய பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி ஆரம்பித்து வைத்தமை குறிப்பிடத்தக்கது(www.acmc.lk).

இலங்கையில் காணப்பட்ட சிறுகுடிசை கைத்தொழில்களுல் ஒன்றுத்தான் தும்பு தொழிலாகும். ஆரம்பக் காலத்தில் இருந்து உபகரணங்கள் இல்லாது கையினால் அனைத்து பொருட்களையும் செய்து சந்தைப்படுத்தி வந்துள்ளனர். இப்போதும் சிலர் கையினால் சிறு கைத்தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். சிலர் உபகரணங்களின் மூலம் தும்புக் கைத்தொழிலை செய்து வருகின்றனர். இலங்கையின் சில பிரதேசங்களில் மிகக் குறைந்தளவிலான தொழிலாளர்களைக் கொண்டு சிறியளவிலான தொழிற்சாலைகளை அமைத்து இதனை மேற்கொண்டு வருகிறார்கள் (www.thinakaran.lk).

பனை ஓலை கைத்தொழிலை பொறுத்தமட்டில் அலங்காரப் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள் என பல பொருட்கள் பனையிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. குறிப்பாக பனையோலைப்பெட்டி, கடகம், பனைப்பாய், பனை ஓலைத் தொப்பி போன்றவை தயாரிக்கப்படுகின்றன. அத்தோடு அகப்பை, சுளகு, தும்புத்தடி, விளக்குமாறு, மூடி போன்றவை தென்னை மூலம் தயாரிக்கப்படுகின்றன (Pasumaikudil.com).

ஆரம்பக்காலங்களில் சிங்கள மக்களின் பிரதான ஜீவனோபாயமாக சிறுகுடிசைக் கைத்தொழில்கள் காணப்பட்டதோடு குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அதில் ஈடுபடக் கூடிய நிலைப்பாடு காணப்பட்டன. அவர்களின் குலத் தொழிலாகவும் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக மட்பாண்டம் செய்யும் சிங்களவர்கள் ஆய்வுப் பிரதேசத்தில் தாழ்த்தப்பட்ட சாதியினராக முன்னர் காணப்பட்டு இருந்தாலும் தற்பொழுது அவர்களின் அடையாளம் மாறி விட்டது. பிற்பட்ட காலங்களில் ஆண்கள் விவசாயம், கூலித் தொழில்களை மேற்கொள்ள ஆரம்பித்ததன் விளைவாக பெண்கள் இதனை தொடர்ந்தும் செய்து வந்தனர்.

ஆய்வுப் பிரதேசத்தை எடுத்துக் கொண்டால் மட்பாண்டத் தயாரிப்பு, பாய் இழைத்தல், பனை ஓலை தயாரிப்பு போன்ற சிறு குடிசைக் கைத்தொழில்கள் ஆரம்பக்காலங்களில் சிங்கள மக்களின் பிரதான தொழிலாக காணப்பட்டமை குறிப்பிடத்தக்கன. குறிப்பாக சிங்களப் பெண்கள் இவ்வாறான சிறுகுடிசை கைத்தொழில்களை மேற்கொண்டு வருமானம் ஈட்டுவதில் அதிக அக்கறை காட்டினர். அதிலும் குறிப்பாக அகப்பை, சுளகு, தும்புத்தடி, விளக்குமாறு, பனையோலைப்பெட்டி, கடகம், பாய் போன்றவற்றை செய்வதில் ஈடுபட்டனர். அவற்றை சந்தைகளில் விற்கலாயினர். சிலர் இதனை பிரதான ஜீவனோபாயமாக மேற்கொண்டு வந்தனர்.

ஆய்வுப் பிரதேசத்தை பொறுத்தமட்டடில் ஆரம்பக் காலங்களில் மட்பாண்ட கைத்தைாழில் செய்பவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியாக காணப்பட்டதோடு இப்பொழுதும் அவ் சாதியை சேர்ந்த குடும்பங்கள் இருந்தாலும் அவர்கள் தற்பொழுது மட்பாண்ட கைத்தொழில் செய்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காலப்போக்கில் இப் பிரதேச சிங்களப் பெண்கள் இதனை முழு நேர தொழிலாகவன்றி நேரம் கிடைக்கும் போது செய்து வந்தனர். அதனை தொடர்ந்து குறிப்பிட்ட சில தலைமுறையினரோடு அவற்றின் செயற்பாடு நின்று போய்விட்டன. பிறகு மக்களின் வாழ்க்கைச் செலவு அதிகரித்தப் போது புதிய தொழிற்துறைகளின் வருகை சிறு குடிசைக் கைத்தொழில்களின் இறுப்பை கேள்விக்குறியாக்கியது எனலாம். ஆதலால் இறத்தோட்டை, எஹலகஸ்தன பிரதேச சிங்களப் பெண்களுக்கு மத்தியில் காணப்பட்ட சிறு குடிசை கைத்தொழில் முறைகள் தற்பொழுது மருவி வருகின்ற நிலைப்பாடு காணப்படுகின்றன.

சிங்கள பெண்களுக்கு மத்தியில் மருவி செல்லும் சிறுகுடிசை கைத்தொழில் முறைகளை வெளிகொணரும் வகையிலும் பாரம்பரிய விடயங்கள் மருவி செல்கின்றமை சமூகத்திற்கு ஆரோக்கியமானது அல்ல என்தனால் இவ் ஆய்வு சமூகவியல் கண்ணோட்டத்தில் மேற்கொள்ளப்படுவதனால் முக்கியத்துவம் பெறுகிறது.

மருவி செல்லும் சிறுகுடிசை கைத்தொழில் தொடர்பாக ஆய்வாளர்கள் மற்றும் சமூகவியலாளர்கள் பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டிருந்தாலும் குறிப்பாக இறத்தோட்டை மற்றும் எஹலகஸ்தன பிரதேச சிங்களப் பெண்களுக்கு மத்தியில் மருவி செல்லும் பாரம்பரிய சிறுகுடிசை கைத்தொழில் முறைகள் தொடர்பாக எவ்வித ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பதனால் இவ் ஆய்வு இடைவெளியினை நிவர்த்தி செய்யும் வகையில் இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### ஆய்வுப் பிரச்சினை

இறத்தோட்டை மற்றும் எஹலகஸ்தன பிரதேங்களில் சிங்களப் பெண்களுக்கு மத்தியில் ஏனைய தொழில்கள் இன்னும் நிலைப்பெற்று இருக்கும் நிலையில் சிறு குடிசைக் கைத்தொழில்கள் மாத்திரம் மருவி செல்லும் நிலையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இலங்கை அரசாங்கமானது பொருளாதார அமைச்சோடு இணைந்து கிராமிய குடிசைக் கைத்தொழில் விருத்திக்கு பல்வேறு திட்டங்களை முன்வைத்து வருவதாக கூறுகின்றப் போதிலும் ஆய்வுப் பிரதேசத்தில் சிறு குடிசைக் கைத்தொழில் முறைகள் ஏன் மருவி செல்கின்ற நிலைப்பாடு காணப்படுகின்றது என்பதே இங்கு ஆய்வுப் பிரச்சினையாக உள்ளது.

### ஆய்வின் நோக்கம்

இவ்வாய்வானது இறத்தோட்டை மற்றும் எஹலகஸ்தன பிரதேச சிங்களப் பெண்களுக்கு மத்தியில் மருவி செல்லும் பாரம்பரிய சிறுகுடிசை கைத்தொழில் முறைகளை அடையாளங் காணல் மற்றும் அவை மருவி செல்வதற்கான காரணங்களை கண்டறிதல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாக உள்ளது.

### ஆய்வு முறையியல்

பண்பு ரீதியான விவரண பகுப்பாய்வாக இவ்வாய்வு அமைகின்றதுடன் இதற்கான தரவுகள் முதலாம் நிலைத் தரவுகள் ( Primary Data ) மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் (Secondary Data) ஆகிய இருவழி முறைகளில் தரவுகள் பெறப்பட்டுள்ளன. மேலதிக தரவுகள் பிரதான தகவளாலியிடம் (Key Informants) இருந்து நேர்காணல் (Interview), இலக்குக் குழு கலந்துரையாடல் மூலம் பெறப்பட்டுள்ளன. பனிப் பந்து (snow Ball) மாதிரி நுட்ப முறை அடிப்படையில் பின்வரும் நபர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

1.மட்பாண்ட கைத்தொழில் செய்தவர்கள் - 03

2. பாய் இழைத்தல் மற்றும் தென்னை ஓலை (அகப்பை, சுளகு, தும்புத்தடி, விளக்குமாறு, கடகம்,பனையோலைப்பெட்டி) கைத்தொழில் செய்தவர்கள் - 09

3.மட்பாண்ட விற்பனையாளர்கள் - 02

மேலும் மட்பாண்டம் செய்தவர்கள், பாய் இழைத்தல் கைத்தொழில் செய்தவர்கள், தென்னை ஓலை கைத்தொழில் செய்தவர்கள், மட்பாண்ட விற்பனையாளர்கள் மற்றும் எழுமாற்று மாதிரி நுட்ப முறையில் பொதுமக்கள் தெரிவு செய்யப்பட்டு 02 இலக்குக்குழு கலந்துரையாடல்கள் (Focus Group Discussion) மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் நிலைத் தரவு சேகரித்தலில் நூல்கள்,(Books), இதழ்கள், கட்டுரைகள், இணையத்தகவல்கள் மற்றும் வெளியீடுகள் என்பவற்றிலிருந்து பெறப்பட்டுள்ளன.

### இலக்கிய மீளாய்வு

ஆய்வு தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள பல்வேறுப்பட்ட ஆய்வுகள், நூல்கள் ஆய்வுகளுக்கு உதவும் எனும் கண்ணோட்டத்தில் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன. இதனூடாக ஆய்வினைத் தெளிவுப்படுத்தவும், ஆய்வினைச் சிறந்த முறையில் வடிவமைக்கவும் ஆய்வு தொடர்பான மேலதிக அறிவினையும் பெறவும் முடிந்தது.

சர்வானந்தன்,மு. (2008) என்பவரால் வெளியிடப்பட்ட ''மோதல் பிராந்தியத்தின் பொருளாதாரம் - பொருளாதார தடையிலிருந்து பொருளாதார அடக்குமுறை நோக்கி'' எனும் நூலில் பிரதேச பேரினப் பொருளாதாரம், பயிர்செய்கை விவசாயம், கால்நடை வளர்ப்பு, மீன்பிடித்தல், கைத்தொழில்கள், பொருளாதார உட்கட்டமைப்பு, வடக்கு கிழக்கு பகுதிகளில் காணப்பட்ட கைத்தொழில்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டிருப்பினும் ஆய்வுப் பிரதேசத்தில் எவ்வாறான சிறுகுடிசைக் கைத்தொழில்கள் காணப்படுகின்றன என்பது தொடர்பாக ஆய்வு செய்யப்படவில்லை.

மூக்கையா,மா.(2005) என்பவரால் வெளியிடப்பட்ட''இலங்கையின் வளங்களும் பயன்பாடுகளும்'' எனும் நூலில் இலங்கையின் கைத்தொழில் துறையில் அண்மைக்கால போக்குகளும் மாற்றங்களும் பின்னனி நிலமைகள் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளதோடு இலங்கையின் விவசாயம், கால்நடை வளர்ப்பு, தேயிலை பயிர் செய்கை, தென்னை, இறப்பர் பயிர் செய்கை, குடிசைக் கைத்தொழில், சிறியளவு கைத்தொழில் என்றால் என்ன என்பது தொடர்பாக குறிப்பிட்டிருந்தாலும் ஆய்வுப் பிரதேசத்தை மையப்படுத்தி எந்தத் தகவலும் குறிப்பிடப்படவில்லை.

''அழிவடைந்து வரும் மட்பாண்டக் கலை'' (www.nanilam.com) என்ற இணையத்தளப் பகுதியில் மட்பாண்டங்களின் பாவனை குறைவடைந்து வருவதற்கான காரணங்கள் மற்றும் பாணை, ஒற்றைக்கல் அடுப்பு, கும்பாணை, கொள்ளிச்சட்டி, கூசா, பூச்சாடி, பூவாஸ், கண்பாணை, குத்துவிளக்கு, கறிமூடி, மூக்குச்சட்டி, கார்த்திகை தீபம், விளையாட்டு பொருட்கள், எள்ளெண்ணெச்சட்டி போன்றவற்றின் தயாரிப்பு தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தை மையப்படுத்தி எந்தத் தகவலும் குறிப்பிடப்படவில்லை.

''மட்பாண்ட கைப்பணி வியாபார நிலைய திறப்புவிழா நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதியமைச்சர் அமீர் அலி" (www.acmc.lk) என்ற இணையத்தளப் பகுதியில் மட்டகளப்பு மாவட்டத்தில் மட்பாண்ட கைத்தொழிலை முன்னேற்றுவது தொடர்பாகவும் மக்களின் வாழ்வாதார மேம்பாடு தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் மட்பாண்ட கைத்தொழிலை முன்னேற்றுவது தொடர்பாக எந்தத் தகவலும் குறிப்பிடப்படவில்லை.

''அழிவை நோக்கி செல்லும் மட்பாண்ட கைத்தொழில்'' (https://yarl.com) என்ற இணையத்தளப் பகுதியில் களிமண்ணால் தயாரிக்கப்படும் மட்பாண்டங்களின் இன்றைய நிலை மற்றும் வவுனியா மாவட்டத்தில் மட்பாண்ட கைத்தொழில் அழிவை நோக்கி செல்வது தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் மட்பாண்ட கைத்தொழில் அழிவடைந்து செல்வது தொடர்பாக குறிப்பிடப்படவில்லை.

''தும்புத் தொழில்'' (www.thinakaran.lk) என்ற இணையத்தளப் பகுதியில் தும்பு தயாரிப்பு தொடர்பாகவும் இலங்கையில் சில பிரதேசங்கிளில் மேற்கொள்ளப்படும் தும்பு கைத்தொழில் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தை மையப்படுத்தி எந்தத் தகவலும் குறிப்பிடப்படவில்லை.

''பனையிலிருந்து பெறப்படும் பயன்கள்'' (www.pasumaikudil. Com) என்ற இணையத்தளப் பகுதியில் பனையிலிருந்து தயாரிக்கப்படும் உணவுப் பொருட்கள் மற்றும் விவசாயப் பயன்பாட்டுப் பொருட்கள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வோடு தொடர்பான விடயங்கள் இங்கு நேரடியாக ஆய்வு செய்யப்படவில்லை.

"Cottage Industries in Srilanka" (www.sundaytimes.lk).என்ற இணையத்தளப் பகுதியில் இலங்கையில் காணப்படும் சிறு குடிசை கைத்தொழில் தொடர்பாக

குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் எவ்வாறான சிறு குடிசை கைத்தொழில்கள் காணப்படுகின்றன என்பது தொடர்பாக குறிப்பிடப்படவில்லை.

"Household Industries in Srilanka" (https://www.google.com)என்ற இணையத்தளப் பகுதியில் இலங்கையில் காணப்படும் சிறு குடிசை கைத்தொழில் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வுப் பிரதேசத்தில் எவ்வாறான சிறு குடிசை கைத்தொழில்கள் காணப்படுகின்றன என்பது தொடர்பாக குறிப்பிடப்படவில்லை.

"Srilanka's Batik Industry - heading for vibrant future" (http://www.srilankabusiness.com) என்ற இணையத்தளப் பகுதியில் இலங்கையில் காணப்படும் Batik கைத்தொழில் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் ஆய்வோடு தொடர்பான விடயங்கள் இங்கு நேரடியாக ஆய்வு செய்யப்படவில்லை.

எனவே இலக்கிய மீளாய்விற்காக எடுக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரைகளும் நூல்களும் இணையத்தள பகுதிகளும் இலங்கையைப் மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட முயற்சியாகவே உள்ளன. ஆனால் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட மாத்தளை மாவட்டத்தின் இறத்தோட்டை மற்றும் எஹலகஸ்தன பிரதேசத்தை மையப்படுத்தி இவ்வாய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இந்த ஆய்வு இடைவெளியினை நிவர்த்தி செய்யும் முகமாகவே இவ் ஆய்வு இடம்பெற்றுள்ளது.

**ஆய்வுப் பிரதேசம்**

ஆய்வுக்காக தெரிவுச் செய்யப்பட்டுள்ள இறத்தோட்டை, எஹலகஸ்தன பிரதேசங்களானது இலங்கைத்தீவின் அழகிய ஆறுகளையும் வயல்வெளிகளையும் மற்றும் மலைகலையும் கொண்ட மத்திய மாகாணத்தின் மாத்தளை மாவட்டத்தில் அமைந்துள்ளது. இது இறத்தோட்டை மற்றும் அம்பன்கங்க கோரளை பிரதேச செயலகத்திற்கு உட்பட்டதாக காணப்படுகின்றது.

இறத்தோட்டை, எஹலகஸ்தன பிரதேசங்களில் பௌத்தர்களே பெரும்பாண்மையினராக வாழ்வதோடு முஸ்லிம் மற்றும் தமிழர்கள் சிறுபாண்மையினராக வாழ்கின்றனர். இறத்தோட்டை பிரதேசத்தில் பௌத்தர்கள் 840 பேரும் இந்துக்கள் 637 பேரும் இஸ்லாமியர்கள் 380 பேரும் கிறிஸ்தவர்கள் 18 பேரும் கத்தோலிக்கர்கள் 100 பேரும் உள்ளனர். இங்கு மொத்தமாக 500 குடும்பங்கள் காணப்படுகின்றன. இங்கு இரண்டு கோவில்களும் இரண்டு பள்ளிவாயல்களும் மற்றும் கிறிஸ்தவ ஆலயம் ஒன்றும் கத்தோலிக்க ஆலயம் ஒன்றும் காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசத்தின் கல்வி நிலையினை எடுத்து நோக்குகையில் தற்பொழுது கல்வியானது இங்கு மிக உயர்ந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. தமிழ் பாடசாலை மற்றும் சிங்கள பாடசாலைகள் இருப்பதோடு ஒரு முஸ்லிம் பாடசாலையும் உள்ளது. மொத்தமாக 08 பாடசாலைகள் காணப்படுகின்றன. ஆய்வுப் பிரதேசத்தின் பொருளாதார நடவடிக்கையில் விவசாயம், வியாபாரம் என்பன பிரதான பொருளாதார நடவடிக்கைகளாக இருப்பதோடு அரசத் தொழில்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கள் இதர பொருளாதார நடவடிக்கைகளாகும்.

ஆரம்பக் காலங்களில் இப் பிரதேசத்தில் சிங்களப் பெண்களின் பிரதான தொழிலாக சிறுகுடிசைக் கைத்தொழில்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கன. குறிப்பாக மட்பாண்டத் தயாரிப்பு, பாய் இழைத்தல், அகப்பை, சுளகு தயாரிப்பு போன்றவை காணப்பட்டன. குறிப்பாக சிங்களப் பெண்களின் பிரதான தொழிலாக இவை காணப்பட்டன. இவற்றை தயாரித்து சந்தையில் அல்லது வீடு வீடாகச் சென்று விற்பனை செய்பவர்களாகக் காணப்பட்டனர். சிலர் இதனை பரம்பரை தொழிலாகச்

செய்தனர். இவற்றுக்கான மூலப் பொருட்களை சூழலில் இருந்து பெற்றுக் கொண்டனர். ஆரம்பக் காலங்களில் சில சிறுகுடிசை கைத்தொழில்கள் சாதியை அடிப்படையாகக் கொண்டு காணப்பட்டது. குறிப்பாக மட்பாண்டம் செய்பவர்கள் ஒரு சாதிப் பிரிவாக காணப்பட்டதோடு அவர்கள் தாழ்த்தப்பட்ட சாதியாகவும் காணப்பட்டனர். சிங்களப் பெண்கள் தம்முடைய வாழ்வாதாரத்தை பூர்த்தி செய்வதற்காக சிறுகுடிசைக் கைத்தொழில்களை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கன. ஆனால் இன்று இறத்தோட்டை மற்றும் எஹலகஸ்தன பிரதேசங்களில் புதிய தொழில் துறைகள் காரணமாக சிறுகுடிசை கைத்தொழில்கள் மருவி சென்று விட்ட நிலையை அவதானிக்க முடிகின்றன. இருப்பினும் ஆரம்பக்காலங்களில் சிறுகுடிசைக் கைத்தொழில்களை மேற்கொண்டவர்களின் வாரிசுகள் இப் பிரதேசத்தில் இன்று இருந்தாலும் கூட அவர்கள் சிறுகுடிசைக் கைத்தொழில்களை மேற்கொள்வதில்லை என்பது குறிப்பிடத்தக்கன.

## ஆய்வு முடிவுகளும் கலந்துரையாடல்களும்

இறத்தோட்டை , எஹலகஸ்தன பிரதேசங்களை எடுத்துக் கொண்டால் ஆரம்பக் காலங்களில் சிங்களப் பெண்களின் வாழ்வாதார தொழிலாக சிறு குடிசை கைத்தொழில்கள் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கன. சிறு குடிசை கைத்தொழில்கள் எனும் போது மட்பாண்டம் செய்தல், அகப்பை, சுளகு, தும்புத்தடி, விளக்குமாறு, கடகம், பனையோலைப்பெட்டி, பாய் போன்றவற்றை தயாரித்து விற்பவர்களாக காணப்பட்டனர்.

இதனை சிலர் பரம்பரை தொழிலாக மேற்கொண்டு வந்தனர். குறிப்பாக பெண்கள் தாய் அல்லது பாட்டி போன்ற குடும்பத்தில் உள்ள பெரியவர்களிடமிருந்து கற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் செய்வதனை அவதானித்து கற்றுக் கொண்டுள்ளமை நேர்காணலின் போது அறிந்துக் கொள்ளக் கூடியதாக இருந்நது.

மட்பாண்டம், அகப்பை, சுளகு, தும்புத்தடி, விளக்குமாறு, கடகம், பனையோலைப்பெட்டி, ஓலைப் பாய் போன்றவற்றை செய்வதற்கான மூலப் பொருட்களை சூழலில் இருந்தே பெற்றுக் கொண்டதாக நேர்காணலின் போது குறிப்பிட்டனர். குறிப்பாக அகப்பை, தும்புத்தடி, விளக்குமாறு, பாய் போன்றவை தயாரிப்பதற்காக தென்னை மரத்தின் ஓலை, சிரட்டை, ஈக்கிள், தென்னந் தும்பு போன்றவற்றை தென்னந் தோட்டம், வயல் வெளிகள் , ஆற்றங் கரையோரம் போன்றவற்றிலிருந்து பெற்றுக் கொள்வதாக குறிப்பிட்டனர். மட்பாண்டம் செய்வதற்கான மண் மற்றும் விறகு போன்றவற்றையும் சூழலில் இருந்தே பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. எந்தவொரு மூலப் பொருளும் காசு கொடுத்து வாங்க வேண்டிய தேவை இருக்கவில்லை.

ஆரம்பத்தில் இப் பிரதேச சிங்களப் பெண்கள் தாம் செய்த பொருட்களை வீடு வீடாகச் சென்று அல்லது கடைகளில் விற்கலாயினர். இருப்பினும் உழைப்புக்கேற்ற இலாபம் கிடைக்கவில்லை என்பதே உண்மை. தற்பொழுது வீட்டு பாவனைக்காக மட்டுமே இவ் பொருட்களை செய்வதாக குறிப்பிட்டனர். இருப்பினும் மட்பாண்டம் மூலம் ஓரளவிற்கு இலாபத்தை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது. ஏனெனில் ஆரம்பக் காலங்களில் வீடுகளில் மட்பாண்டங்களின் பாவனை அதிகரித்து காணப்பட்டமை குறிப்பிடத்தக்கன.

மட்பாண்ட கைத்தொழிலை பொறுத்தமட்டில் இப் பிரதேசத்தில் யாரும் இதனை மேற்கொள்வதில்லை. ஆரம்பத்தில் இப் பிரதேசத்தில் குறிப்பிட்ட சாதியை சேர்ந்தவர்கள் இதனை மேற்கொண்டு வந்தனர் இவர்கள் தாழ் சாதியினராக கருதப்பட்டனர். பாணை, ஒற்றைக்கல் அடுப்பு, கும்பாணை, கொள்ளிச்சட்டி, கூசா, பூச்சாடி, பூவாஸ், கண்பாணை, குத்துவிளக்கு, கறிமூடி, மூக்குச்சட்டி, கார்த்திகை

தீபம், விளையாட்டு பொருட்கள், எள்ளெண்ணெச்சட்டி போன்றவற்றை செய்பவர்களாகக் காணப்பட்டனர். இருப்பினும் தற்காலத்தில் அவர்களின் வாழ்வியல் அடையாளம் மாறி விட்டன. அவர்கள் இத் தொழிலை விட்டு விட்டனர். வெளிநாட்டு வேலைவாய்ப்பு, கல்வி, நாகரீகம், வசதியான வாழ்க்கை, அரசாங்க தொழில் போன்றவை காரணமாக அவர்கள் இத் தொழிலை விட்டு விட்டனர். தற்பொழுது அவர்களின் பரம்பரையில் யாரும் மட்பாண்ட கைத்தொழில் செய்வதுமில்லை ஆரம்பத்தில் அவர்கள் இத் தொழிலை செய்ததாக குறிப்பிட விரும்புவதுமில்லை.

மட்பாண்ட கைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் இறத்தோட்டை பிரதேசத்திலும் ஓலைப் பாய் இழைத்தல் மற்றும் தென்னை ஓலை கைத்தொழில் (அகப்பை, சுளகு, தும்புத்தடி, விளக்குமாறு, கடகம், பனையோலைப்பெட்டி) போன்ற கைத்தொழில் செய்தவர்கள் எஹலகஸ்தன பிரதேசத்திலும் உள்ளனர். அவர்களுள் லீலாவதி , லீலாவதி ,M.G.டிகிரி, K.G. நந்தாவதி, சித்ரா பத்மா, விமலாவதி, குணவதி, சுமனாவதி, சந்திராவதி போன்றோர் இவ் கைத்தொழிலை மேற்காள்பவர்களாக இருந்துள்ளனர்.

**ஓலைப் பாய் கைத்தொழில் :**

லீலாவதி என்பவரிடம் சிறு குடிசை கைத்தொழில் தொடர்பாக கேட்டப் போது இவர் ஆரம்பத்தில் ஓலைப் பாய் செய்து வீடுகளுக்கு விற்றதாகவும் இவ் கைத்தொழிலை அம்மாவிடமிருந்து கற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார். அத்தோடு இவற்றை செய்வதற்கான மூலப்பொருட்களை தோட்ங்களில் இருந்து பெற்றுக் கொண்டதாக கூறினார். இதன் மூலம் கிடைக்கும் இலாபம் தொடர்பாக கேட்டப் போது முன்னர் ஓலைப் பாய் ஒன்று 50 அல்லது 100 ரூபாய்க்கு விற்கப்பட்டதாகவும் தற்பொழுது 500 ரூபாய் வரை விற்க முடியும் என்றார். இதன் மூலம் கிடைத்த பணத்தைக் கொண்டு அன்றாட வீட்டு செலவுக்கு செலவலித்ததாகவும் கூறினார். இவர் விகாரைகளுக்கு இலவசமாக நன்மையை எதிர்பார்த்து பாய் ,பூசைக்காக தட்டு போன்றவற்றை கொடுத்ததாகவும் மரண வீடுகளுக்கு தேவைப்படும்போது கொடுப்பதாகவும் பின்னர் பெற்றுக் கொள்வதாகவும் குறிப்பிட்டார். ஆனால் தற்பொழுது வீட்டு பாவனைக்காக மட்டும் இவற்றை செய்வதாக கூறியமை குறிப்பிடத்தக்கது.

சிறு குடிசை கைத்தொழிலானது மருவி வருவதற்கான காரணத்தை கேட்டப் போது சிங்களப் பெண்கள் பாடசாலை கல்வியை முடித்துப் பின்னர் வேலைகளுக்கு செலகின்றனர். அத்தோடு வீட்டு வேலைகளை செய்வதற்கே நேரம் போதுமாக இருப்பதனால் இவற்றினை செய்வதற்கு நேரம் காணாது என்கின்றனர். அத்தோடு இவர் கூறும் போது ''நான் சிறுவயதில் பாடசாலை விட்டு வந்ததிலிருந்து அம்மாவிடமிருந்து இவற்றின் செய்முறையை கற்றுக் கொண்டதாகவும் ஆனால் தற்காலத்தில் பிள்ளைகளுக்கு இதனை கற்றுக் கொள்ள நேரமில்லை.'' என்றார். அத்தோடு இவர் கூறும் போது இவருடைய பிள்ளைகள் வீடு அழுக்காகி விடும் என்பதனால் இவர் வீட்டு பாவனைக்காக பாய் பின்னுவதை கூட விரும்புவதில்லை என்றார்.

சந்திராவதி என்பவரை சந்தித்தப் போது இவருடைய அம்மா சோமாவதியிடமிருந்து ஓலைப் பாய் பின்னும் செய்முறையை கற்றுக் கொண்டதாகவும் வீட்டு பாவனைக்காக மட்டும் செய்ததாகவும் குறிப்பிட்டார். அத்தோடு இவருடைய வீட்டில் நெல் காயவைப்பதற்காக ஓலைப் பாய் பயன்படுத்தப்பட்டதாக கூறினார். சிறு குடிசை கைத்தொழிலானது மருவி வருவதற்கான காரணத்தை கேட்டப் போது நேரமின்மை, இளம் தலைமுறயினரின் ஆர்வமின்மை போன்றவற்றை குறிப்பிட்டார். இவருடைய மகளிடம் பாய் இழைத்தல் கைத்தொழிலை கற்றுக் கொள்ளாமைக்கான காரணத்தை

கேட்டப் போது தற்காலத்தில் வீடுகளில் அதிகமாக நவீன ரக பாய்கள் பாவிக்கப்படுவதனால் இவ் வகையான பாய்களின் பாவனை குறைந்து விட்டது. அத்தோடு இவற்றை தற்காலத்தில் கடைகளுக்கு விற்பனை செய்தாலும் மக்கள் இவற்றை வாங்கும் வீதம் குறைவாகவே காணப்படும் என்றார்.

லீலாவதி என்பவரிடம் சிறு குடிசை கைத்தொழில் தொடர்பாக கேட்டப் போது இவர் அவருடைய அம்மா கலு என்பவரிடமிருந்து பாய் இழைத்தல் கைத்தொழிலை கற்றுக் கொண்டதாக குறிப்பிட்டார். இவருடைய அம்மா தற்பொழுது மரணித்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. முன்னர் ஓலைப் பாய் செய்து விற்றதாகவும் கூறினார். அம்மாவுடைய காலத்தில் ஓலைப் பாய் ஒன்று 2.50 சதத்திற்கு விற்கப்பட்டதாக குறிப்பிட்டார். இவர் ஓலைப் பாய் செய்து வீடுகளுக்கு விற்றதாகவும் இதன் மூலம் கிடைத்த இலாபத்தை கொண்டு தன்னுடைய பிள்ளைகளின் கல்விக்காக செலவலித்ததாகவும் குறிப்பிட்டார். இவருடைய மகன் தற்பொழுது இலண்டனில் பணி புரிவுது குறிப்பிடத்தக்கது. அத்தோடு ஆரம்பக் காலங்களில் வீடுகளில் கதிரைகள் இல்லாதப் போது ஓலைப் பாயிலேயே அமருவதாகவும் தூங்குவதாகவும் மேலும் நெல் காயவைப்பதற்காகவும் ஓலைப் பாய் பயன்படுத்தப்பட்டதாக குறிப்பிட்டார். ஆனால் தற்பொழுது கதிரை, கட்டில் போன்ற நவீன உபகரணங்கள் காரணமாக ஓலைப் பாய் இன்று பயன்படுத்தப்படுவதில்லை என்றார்.

இவருடைய மகள் இதனை கற்றுக் கொள்வதில் பெருமளவில் ஆர்வம் காட்டவில்லை என்றார். இதனால் இவருடன் இவருடைய பரம்பரையில் இவ் கைத்தொழில் மருவி செல்லும் நிலை காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

**பனையோலைப் பெட்டி கைத்தொழில் :**

M.G.டிகிரி என்பவரிடம் இது தொடர்பாக கேட்டப் போது இவரும் அம்மாவிடமிருந்து பனையோலைப் பெட்டி செய்வதனை கற்றுக் கொண்டதாக குறிப்பிட்டார். தற்பொழுது நோய் காரணமாக இவற்றை செய்வதனை விட்டு விட்டதாகவும் கூறினார். சிறு குடிசை கைத்தொழிலானது மருவி வருவதற்கான காரணத்தை கேட்டப் போது நேரமின்மை, இளம் தலைமுறயினரின் ஆர்வமின்மை, நவீன உபகரணங்களின் அதிகரித்த பாவனை போன்றவற்றை குறிப்பிட்டதோடு இளம் தலைமுறையினர் ஓலைப்பாய், கடகம், பனையோலைப்பெட்டி போன்றவற்றை பாவிப்பதனை விரும்புவதில்லை என்றார். ஆரம்பக் காலங்களில் மக்கள் பனையோலைப் பெட்டிகளில் அரிசி , நெல் போன்றவற்றை இடுவதற்காக பயன்படுத்தினார்கள். ஆனால் தற்பொழுது அவற்றுக்கு மாற்றீடாக நவீன உபகரணங்கள் காணப்படுகின்றன.

**ஓலைத் தட்டு செய்யும் கைத்தொழில்** :

K.G. நந்தாவதி என்பவரிடம் சிறு குடிசை கைத்தொழில் தொடர்பாக கேட்டப் போது பாட்டியிடமிருந்து இதனை கற்றுக் கொண்டதாக குறிப்பிட்டார். இவர் ஆரம்பத்தில் பூ தட்டு, ஓலையால் செய்யப்பட்ட மூடி போன்றவற்றைச் செய்து வீட்டில் விற்றதாகவும் கூறினார். இதன் மூலம் கிடைக்கும் இலாபம் தொடர்பாக கேட்டப் போது முன்னர் தட்டு செய்து 20 அல்லது 25 ரூபாய்க்கு விற்றதாகவும் குறிப்பிட்டார். அத்தோடு இவர் குறிப்பிடுகையில் தன்னுடைய பிள்ளைகளுக்கு இது தொடர்பாக சொல்லிக் கொடுத்தாலும் அவர்கள் இதன் செய்முறையை கற்றுக் கொள்வதில் ஆர்வம் செலுத்தவில்லை என்றார். இவருடைய வீட்டில் இன்றும் ஓலைத் தட்டு பாவிக்கிறார்கள். சிறு குடிசை கைத்தொழிலானது மருவி வருவதற்கான காரணத்தை கேட்டப் போது மக்கள் பழங்கால பொருட்களை நாகரீகம் காரணமாக பாவிக்க

விரும்புவதில்லை. ஆரம்பக் காலங்களில் அதிகமாக மக்கள் மண் வீடுகளில் வசித்தமையினால் இவ்வாறான பொருட்களை பாவித்ததாகவும் தற்காலத்தில் மக்களின் வாழ்க்கை அமைப்பு மாறிவிட்டதால் இவற்றின் பாவனை குறைந்து விட்டது என்றார்.

மைத்திரிபால என்பவரை சந்தித்தப் போது அவருடைய தாய் சுமணாவதி என்பவர் தட்டு, பெட்டி போன்றவற்றை வீட்டு பாவனைக்காக செய்ததாகவும் குறிப்பிட்டார். இவருடைய அம்மா தற்பொழுது மரணித்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் அவர் குறிப்பிடுகையில் ஆரம்பக் காலங்களில் சிங்கள வீடுகளில் சோறு சமைத்தவுடன் அவற்றை தட்டில் பரிமாற முன்னர் அவற்றை ஓலையால் செய்த தட்டொன்று இருந்ததாகவும் அவற்றிலே சோற்றை இட்டு பிறகு தட்டில் பரிமாறுவது வழக்கமாக (சிரித்) இருந்ததாகவும் குறிப்பிட்டார். அது "பத் வட்டி" என்று அழைக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார். அத்தோடு அவர் குறிப்பிடுகையில் ஓலைப் பாய் ஒன்று செய்வதாக இருந்தால் குறைந்தது மூன்று நாள் தேவைப்படும். இருப்பினும் சிரமப்பட்டு செய்யும் அளவிற்கு இலாபம் கிடைப்பதில்லை என்றார். இவ் கைத்தொழிலானது மருவி வருவதற்கான காரணத்தை கேட்டப் போது சிங்களப் பெண்கள் பாடசாலை கல்வியை முடித்தப் பின்னர் வேலைகளுக்கு செலகின்றனர். அத்தோடு எதிர்பார்த்த இலாபம் கிடைக்காமையினால் மக்கள் இவ் தொழில்களை விட்டு விட்டனர் என்றார்.

**சுளகு கைத்தொழில் :**

சித்ரா பத்மா என்பவரிடம் சிறு குடிசை கைத்தொழில் தொடர்பாக கேட்டப் போது அம்மா K.G. போதியிடமிருந்து கற்றுக் கொண்டதாகவும் இவருடைய அம்மா முன்னர் சுளகு செய்து கடைகளுக்கு விற்றதாகவும் குறிப்பிட்டார். இவர் அம்மாவிடமிருந்து ஓரளவிற்கு கற்றுக் கொண்டதாக குறிப்பிட்டார். ஆனால் தற்பொழுது நோய் காரணமாக இவற்றை செய்வதனை விட்டு விட்டதாகவும் கூறினார்.அத்தோடு சிரமப்பட்டு செய்தாலும் பெருமளவில் இலாபம் கிடைப்பதில்லை என்றார். தற்பொழுது சில நேரம் வீட்டு பாவனைக்காக மட்டும் செய்வதாக குறிப்பிட்டார்.

**தும்புத்தடி , விளக்குமாறு கைத்தொழில் :**

விமலாவதி என்பவரிடம் இது தொடர்பாக கேட்டப் போது அம்மாவிடமிருந்து தும்புத்தடி, விளக்குமாறு செய்யும் செய்முறையை கற்றுக் கொண்டதாகவும் வீட்டு பாவனைக்கு மட்டும் பயன்படுத்துவதாகவும் விற்பனை செய்வதில்லை என்றும் குறிப்பிட்டார்.ஆரம்பக் காலத்தில் வீடுகளை சுத்தப்படுத்துவதற்காக தென்னந் தும்பு,ஈக்கிள் போன்றவற்றால் செய்த தும்புத்தடி, விளக்குமாறு போன்றவற்றை பயன்படுத்தினாலும் தற்காலத்தில் பிளாஸ்டிக் தும்புத்தடிகளை மக்கள் பெரும்பாலும் பயன்படுத்துவதாக குறிப்பிட்டார். முன்னர் மக்கள் அதிகமாக மண் வீடுகளில் வசித்ததன் காரணமாக தென்னந் தும்பால் செய்த தும்புத்தடிகளை பயன்படுத்தினார்கள். அத்தோடு பெரிய தோட்டங்கள், முற்றங்கள் இருந்ததன் காரணமாக அவற்றினை சுத்தப்படுத்துவதற்காக விளக்குமாறு பயன்படுத்தினார்கள். ஆனால் தற்காலத்தில் நகர் புறங்களில் முற்றங்கள் உள்ள வீடுகள் மிகவும் குறைவாகவே காணப்படுவதனால் இவற்றின் பாவனை குறைவாகவே காணப்படுகின்றது. கிராமப்புறங்களில் இன்னும் மக்கள் இவற்றினை பயன்படுத்துகிறார்கள் என்றார்.

**அகப்பை கைத்தொழில் :**

குணவதி என்பவரை சந்தித்தப் போது இவர் முன்னர் அகப்பைசெய்து வீட்டு பாவனைக்காக செய்ததாகவும் அவற்றை விற்பனை செய்யவில்லை என்றும் குறிப்பிட்டார். இருப்பினும் தற்பொழுது செய்வதனை விட்டு விட்டதாகவும் கூறினார்.அகப்பை ஒன்று 25 ரூபா அல்லது 30 ரூபா வரை விற்பனை செய்ய முடியும் ஆனால் தற்காலத்தில் கடைகளில் கூட அகப்பை விற்பனை குறைவாக காணப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

**மட்பாண்ட கைத்தொழில் :**

ஆய்வு பிரதேசத்தில் மட்பாண்ட கைத்தொழிலானது மருவி வருவதற்கான காரணத்தை மட்பாண்ட விற்பனையாளர்களிடம் கேட்டப் போது அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டனர். தற்காலத்தில் எல்லா வீடுகளிலும் பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி உபகரணங்களின் பாவனை அதிகமாக காணப்படுகின்றது. மக்கள் அவற்றை பாவிப்பதனையே அதிகம் விரும்புகின்றனர். அத்தோடு மட்பாண்டங்கள் இலகுவில் உடைந்து விடும் தன்மை கொண்டது. பிளாஸ்டிக் உபகரணங்கள் நீண்ட நாள் பாவிக்கும் தன்மை கொண்டது. இதுவும் மக்கள் பிளாஸ்டிக் உபகரணங்களை வாங்குவதற்கு காரணமாக அமைகின்றது. அத்தோடு அவை கண்ணைக் கவரும் தன்மை கொண்டது என்கின்றனர்.

ஆரம்பக் காலங்களில் மக்கள் பாணை, ஒற்றைக்கல் அடுப்பு, கும்பாணை, கொள்ளிச்சட்டி, கூசா, பூச்சாடி, பூவாஸ், கண்பாணை, குத்துவிளக்கு, கறிமூடி, மூக்குச்சட்டி, கார்த்திகை தீபம், விளையாட்டு பொருட்கள், எள்ளெண்ணெச்சட்டி போன்ற அனைத்து வீட்டு பாவனை பொருட்களும் மண்ணாலேயே செய்யப்பட்டவையாக காணப்பட்டன. ஆனால் தற்பொழுது இவற்றுக்கு மாற்றீடாக நவீன உபகரணங்கள் காணப்படுகின்றன. ஒற்றைக்கல் அடுப்பிற்கு மாறாக மண்ணெண்ணெய் அடுப்பு , எறிவாயு அடுப்பு போன்றவை காணப்படுகின்றன. கும்பாணை, கண்பாணை, கறிமூடி, மூக்குச்சட்டி இவற்றுக்கு மாற்றீடாக அலுமினிய பாத்திரங்கள் காணப்படுகின்றன. அதேப்போன்று கூசா, பூச்சாடி, பூவாஸ், விளையாட்டு பொருட்கள் இவற்றுக்கு மாற்றீடாக பிளாஸ்டிக் மற்றும் கண்ணாடி உபகரணங்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கன. எனவே மட்பாண்டங்களுக்கு மாற்றீடாக நவீன உபகரணங்கள் இருப்பதனால் மட்பாண்டங்களின் பாவனை குறைந்து விட்டது எனலாம்.

இருப்பினும் தற்காலத்தில் தமிழ் மற்றும் சிங்கள வீடுகளில் விகாரை, கோவில்களில் பூஜைகளுக்கு குத்துவிளக்கு, கார்த்திகை தீபம் போன்றவற்றை பயன்படுத்துகின்றனர். அத்தோடு தைப் பொங்கல், சிங்கள தமிழ் புதுவருட பிறப்பன்று பாற்சோறு சமைப்பதற்காககவும் சுப காரியங்களின் போது பால் பொங்க வைப்பதற்காகவும் மண் பானைகள் பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கன.

பொது மக்களிடம் மட்பாண்டங்களின் பாவனை தொடர்பாக கேட்டப் போது அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டனர். “ஆரம்பக் காலங்களில் வீடுகளில் சோறு, கறி சமைப்பதற்காக மண் பாத்திரங்களே பயன்படுத்தப்பட்டன. அத்தோடு பெரும்பாலும் வீடுகளில் மண் அடுப்புகளே பயன்படுத்தப்பட்டன. மண் பாத்திரங்களில் சமைப்பது சுவையானதாகவும் ஆரோக்கியமானதாகவும் காணப்பட்டன. இருப்பினும் தற்காலத்தில் மண்ணெண்ணெய் அடுப்பு ,எறிவாயு அடுப்புக்களில் அலுமினிய பாத்திரங்களை வைத்து சமைப்பதனால் சுவையற்றதாகவும் ஆரோக்கியமற்றதாகவும் காணப்படுகின்றன.” என்கின்றனர். இன்றும் கூட ஆய்வுப் பிரதேசத்தில் உள்ள பெரும்பாலும் சிங்கள, தமிழ், முஸ்லிம் வீடுகளில் பலாக்காய், மீன், இறைச்சி,

பொலசிக்காய், ஈரப்பலா போன்ற கறி வகைகள் மண் பாத்திரங்களில் சமைப்பது குறிப்பிடத்தக்கன.

ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் ஆய்வு பிரதேசத்தினை எடுத்து நோக்கும் போது சிறு குடிசை கைத்தொழில் முறைகள் மருவி வரும் நிலையினை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக மட்பாண்ட கைத்தொழில், அகப்பை கைத்தொழில் , சுளகு கைத்தொழில், தும்புத்தடி, விளக்குமாறு கைத்தொழில் , கடகம், பனையோலைப்பெட்டி கைத்தொழில் , ஓலைப் பாய் கைத்தொழில் போன்றவை மருவி வரும் நிலைப்பாட்டினை ஆய்வு முடிவுகளின் இறுதியில் வெளிகொணர முடிகின்றன. அதாவது இவற்றின் பாவனை மக்களிடம் குறைந்து காணப்படுகின்றமையை ஆய்வு முடிவுகள் எடுத்துக்காட்டுகின்றன.

**சிறு குடிசை கைத்தொழில் முறைகள் மருவி சென்றமைக்ககான காரணங்கள்**

இறத்தோட்டை , எஹலகஸ்தன பிரதேசத்தில் உள்ள சிறு குடிசை கைத்தொழிலாளர்களை நேர்காணல் மேற்கொண்டப் போது சிறு குடிசை கைத்தொழில் முறைகள் மருவி சென்றமைக்ககான காரணங்களை கண்டறிய முடிந்தது.

- ❖ நேரமின்மை.
- ❖ இளம் தலைமுறையினரின் ஆர்வமின்மை.
- ❖ இளம் தலைமுறையினர் பழைமையை விரும்பாமை.
- ❖ உழைப்புக்கேற்ற இலாபமின்மை.
- ❖ புதிய தொழிற்துறைகளின் வருகை.
- ❖ நாகரீக வளர்ச்சி.
- ❖ பெண்கள் புதிய தொழிற்துறைகளை நாடிச் செல்லல்.
- ❖ நவீன உபகரணங்களின் கண்டுபிடிப்பு , அதிகரித்த பாவனை.
- ❖ பிளாஸ்டிக் மற்றும் அலுமினிய உபகரணங்களின் அதிகரித்த பாவனை.

**முடிவுரையும் பரிந்துரையும்**

ஆய்வுப் பிரதேசத்தில் சிங்களப் பெண்களுக்கு மத்தியில் முன்பு காணப்பட்ட சிறு குடிசை கைத்தொழில் முறையானது நேரமின்மை, இளம் தலைமுறையினரின் ஆர்வமின்மை, இளம் தலைமுறையினர் பழைமையை விரும்பாமை, உழைப்புக்கேற்ற இலாபமின்மை, புதிய தொழிற்துறைகளின் வருகை, நாகரீக வளர்ச்சி, பெண்கள் புதிய தொழிற்துளைகளை நாடிச் செல்லல், நவீன உபகரணங்களின் கண்டுபிடிப்பு , அதிகரித்த பாவனை,பிளாஸ்டிக் மற்றும் அலுமினிய உபகரணங்களின் அதிகரித்த பாவனை போன்ற காரணங்களால் மருவி வரும் நிலையை அவதானிக்க முடிகின்றது. இப் பிரதேசத்தில் உள்ள சிறு குடிசை கைத்தொழிலாளர்களின் பிள்ளைகள் இதனை கற்றுக் கொள்வதில் ஆர்வம் இல்லை என்பதை ஆய்வின் மூலம் அறிய முடிந்தது. இதன் காரணமாக குறிப்பிட்ட சில தலைமுறையினரோடு இவ் கைத்தொழில் முறை பட்டொழிந்து விடும் என்பது உண்மை. இப்பொழுது உள்ள சிறு குடிசை கைத்தொழிலாளர்களும் வீட்டு பாவனைக்காக மட்டுமே இதனை செய்கின்றார்களே தவிர விற்பனைக்காக செய்யவில்லை. இதன் காரணமாக இவ் சிறு குடிசை கைத்தொழிலானது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலே மேற்கொள்ளப்படுகின்றது. இவ் சிறு குடிசை கைத்தொழிலை வினைத்திறனாக மேற்கொள்வதற்கு பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

- சிறு குடிசை கைத்தொழிலாளர்கள் தம்முடைய வாரிசுகள் ஒருவருக்காவது இவ் கைத்தொழில் முறையை கற்றுக் கொடுத்து அதனை தொடர்தேர்ச்சியாக செய்ய ஊக்கப்படுத்த வேண்டும்.
- இளம் தலைமுறையினரும் இவ் சிறு குடிசை கைத்தொழில் முறையை கற்றுக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும்.
- இளம் தலைமுறையினர் பாரம்பரிய சிறு குடிசை கைத்தொழில் முறைகளை பாதுகாப்பதில் ஆர்வம் செலுத்த வேண்டும்.
- பாரம்பரிய சிறு குடிசை கைத்தொழில் முறைகள் தொடர்பாக இளைஞர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும்.
- அரசாங்கமும் பாரம்பரிய சிறு குடிசை கைத்தொழில் முறைகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- சிறு குடிசை கைத்தொழில் முறைகளை கற்றுக் கொள்ளும் வகையில் அரசாங்கம் பயிற்சி நிலையங்களை அமைத்து இளம் தலைமுறையினருக்கு கற்றுக் கொள்ள வழி வகுக்க வேண்டும்.
- பாடசாலை பாடவிதானத்திலும் பாரம்பரிய சிறு குடிசை கைத்தொழில் முறைகள் தொடர்பாக மாணவர்களுக்கு விழிப்புணர்வூட்ட வேண்டும்.
- பாரம்பரிய சிறு குடிசை கைத்தொழில் முறைகளை உள்ளடக்கிய கண்காட்சிகளை மேற்கொள்ளல்.
- பாரம்பரிய சிறு குடிசை கைத்தொழில் முறைகளை பாதுகாப்பதற்கென்று அருங்காட்சியகங்களை அமைத்தல்.
- ஓவ்வொரு பிரதேசங்களிலும் உள்ள சிறு குடிசை கைத்தொழிலாளர்களை அடையாளங் கண்டு அவர்களுக்கான களம் , முலதனம் என்பவற்றை அமைத்துக் கொடுத்து ஊக்கப்படுத்த வேண்டும்.

மேற்படி விடயங்களை ஆய்வுப் பிரதேசத்தில் மேற்கொள்வதன் மூலம் சிறு குடிசை கைத்தொழில் முறையை மென் மேலும் வினைத்திறனாக மேற்கொள்ள முடியும். இல்லாவிடின் குறிப்பிட்ட சில தலைமுறையினரோடு பட்டொழிந்து விடும் என்பது திண்ணம்.

**உசாத்துணைகள்**

சர்வானந்தன்,மு. (2008). மோதல் *பிராந்தியத்தின் பொருளாதாரம் -பொருளாதார தடையிலிருந்து பொருளாதார அடக்குமுறை நோக்கி.* பருத்தித்துறை. பருத்தித்துறை ஆய்வகம்.

மூக்கையா,மா. (2005). *இலங்கையின் வளங்களும் பயன்பாடுகளும்.* சென்னை.

சிறி சரவணன் ஆப்செட் பிரிண்டர்ஸ்.

*Cottage Industries in Srilanka*.Retrived from www.sundaytimes.lk.

*Household Industries in Srilanka*. Retrived from https://www.google.com.

*Srilanka's Batik Industry - heading for vibrant future*. Retrieved From http://www.srilankabusiness.com.

*அழிவடைந்து வரும் மட்பாண்டக் கலை.*Retrieved From www.nanilam.com.

*மட்பாண்ட கைப்பணி வியாபார நிலைய திறப்புவிழா நிகழ்வில் பிரதம அதிதியாக பிரதியமைச்சர் அமிர் அலி.*Retrieved From www.acmc.lk.

*அழிவை நோக்கி செல்லும் மட்பாண்ட கைத்தொழில்.*Retrieved Januvary 31 From https://yarl.com.

*பனையிலிருந்து பெறப்படும் பயன்கள்.* Retrieved From www. Pasumaikudil.com.

*தும்புத் தொழில்.* Retrieved From www.thinakaran.lk.

**பிரதான தகவலாளிகள்**

லீலாவதி -வயது (68)

லீலாவதி-வயது (63)

M.G.டிகிரி -வயது(88)

K.G. நந்தாவதி -வயது (60)

சித்ரா பத்மா -வயது (54)

விமலாவதி -வயது(45)

குணவதி.-வயது(68)

மைத்திரிபால (சுமணாவதியின் மகன்)- வயது (65)

சந்திராவதி - வயது (89)